**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 119/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW4<br>Defense<br>Court |
| Name | திரு. முத்து ராஜ் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of March 2025.

நான் மாயநேரியில் வசித்து வருகிறேன். நான் டெய்லர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். காட்டப்படும் பார்வை மகஜரில் என்னுடையது கையெழுத்து இல்லை. வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது. வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

23.08.2016 ஆம் தேதி 11.00 மணிக்கு சம்பவ இடமான பிள்ளையார் கோவில் தெரு ரத்தினசாமி வீடும் அதன் சுற்றுபுறங்களையும் மூன்றடைப்பு காவல் உதவி ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.119/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW 3<br>Defense<br>Court |
| Name | திருமதி. பரமாயி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of March 2025.

நான் மாயநேரியில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 எனது அக்கா. ஆஜர் எதிரியை தெரியாது. தேதி, மாதம் ஞாபகம் இல்லை. 2016 ம் வருடம் நானும் அ.சா.1ம் குளத்து வேலை முடித்து விட்டு பிற்பகல் 3.00 அல்லது 3.30 மணியளவில் அ.சா.1 முன்னால் சென்று கொண்டு இருந்தார், நான் பின்னால் வந்து கொண்டு இருந்தேன். எதிரி அ.சா.1யை பிள்ளையார் கோவில் அருகில் வைத்து அடித்தார். நான் பின்னால் வந்து கொண்டு இருந்ததால் என்ன பேச்சு வார்த்தை நடந்தது என்று தெரியாது, ஆனால் அடித்ததை நான் பார்த்தேன். எதிரி அ.சா.1ன் முடியை பிடித்து இழுத்து, நெஞ்சில் குத்தினார். எதற்காக அடித்தார் என்று தெரியாது. சம்பவத்தை வேறு யாரும் பார்த்தது போல எனக்கு தெரியவில்லை. போலீசார் ஊருக்குள் வந்து இருப்பார்கள், என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை**

நான் மாயநேரி வடக்கு தெருவில் வசித்து வருகிறேன். அ.சா.1 மாயநேரி தெற்கு தெருவில் வசித்து வருகிறார். பிள்ளையார் கோவில் நடுத்தெருவில் உள்ளது. நான் வேலையை முடித்து வீட்டிற்கு வந்து கொண்டு இருந்த போது சம்பவம் நடந்தது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு செல்வதற்கு பிள்ளையார் கோவில் வழியாக செல்ல

தேவையில்லை என்றால் பிள்ளையார் கோவில் வழியாக தான் செல்ல வேண்டும்.

சம்பவத்தில் அடிபட்டு இருந்த எனது அக்காவை எனது வீட்டிற்கு அழைத்து சென்றேனா அல்லது அ.சா.1 வீட்டிற்கு அழைத்து சென்றேனா என்றால் அ.சா.1 வீட்டிற்கு அழைத்து சென்றேன். சம்பவ இடத்தில் இருந்து அ.சா.1 யை நடத்தி 10 நிமிடத்தில் அ.சா.1 வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டேன். சம்பவத்திற்கு முந்தைய தினம் அ.சா.1ன் மகன் எதிரியின் வீட்டு கதவை தட்டினார் என்ற விவரம் நான் கேள்விபட்டேனா என்றால் எனக்கு அந்த விவரத்தை பற்றி தெரியாது.

மேற்படி முருகன் எதிரி வீட்டு கதவை தட்டிய தினத்தன்று நான் ஊரில் இல்லை, எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் சொல்வது போல எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றும், நான் குளத்து வேலை முடித்து விட்டு அ.சா.1டன் வீட்டிற்கு வந்தேன் என்று சொல்வது பொய் என்றும், அ.சா.1 கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.119/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | திருமதி. உஷா ராணி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of March 2025.

நான் மாயநேரியில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். என்னுடைய உறவினர். அ.சா.1 எனது மாமியார். கடந்த 22.08.2016 ம் தேதி பிற்பகல் 3.30 மணியளவில் எதிரி எனது மாமியாரான அ.சா.1 யை அவரது வீட்டில் இருந்து பிள்ளையார் கோவில் வரை 3 தெரு தாண்டி துரத்தி துரத்தி அடித்தார். நான் தகவல் அறிந்து எனது அம்மா வீட்டில் இருந்து அவரை பார்ப்பதற்காக பிள்ளையார் கோவிலுக்கு வந்தேன். எதிரி எனது மாமியாரான அ.சா.1 யை முடியை பிடித்து சுற்றி நெஞ்சில் குத்தினார், அ.சா.1 எனது மாமியார் மூச்சி பேச்சி இல்லாமல் கீழே விழுந்துவிட்டார். மேற்படி சம்பவம் பிள்ளையார் கோவில் அருகில் வைத்து நடந்தது.

பின்னர் மருத்துவமனைக்கு அ.சா.1 செல்லவில்லை. வீட்டில் அவருக்கு சிகிச்சை அளித்து பின்னர் மறுநாள் காவல் நிலையத்திற்கு சென்று நான் எழுதிய புகார் மனுவில் அ.சா.1 எனது கையெழுத்து செய்தார். மேற்படி எனது கணவருக்கும் ஆஜர் எதிரிக்கும் குவாட்டர் வாங்குவது சம்பந்தமாக பிரச்சனை இருந்தது. எனது கணவர் முருகனை அடிக்க முடியாது என்பதாலும், எனது வீடு தூரமாக இருந்ததாலும் எனது மாமியாரை அடித்துள்ளார். அ.சா.1 யை எதிரி இரண்டு தடவை அடித்துள்ளார். நான் ஒரு தடவை தான் பார்த்தேன். அ.சா.1 யை எதிரி

அடிக்கும் போது அ.சா.1ன் தங்கை பரமாயி சம்பவத்தின் போது உடன் இருந்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எனது தாயார் வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் ஒரு நபர் என்னிடம் அ.சா.1 யை எதிரி அடித்து கொண்டு இருப்பதாக தகவல் தெரிவித்தார். நான் போகும் போது எதிரி அ.சா.1 யை விரட்டி கொண்டு வந்தார். இவ்வழக்கு சம்பவம் நடைபெறுவதற்கு ஆறு மாதத்திற்கு முன்பாக எங்கள் ஊரை சேர்ந்த சேர்மன் மகன் இசக்கி முத்து வீட்டின் கதவை தட்டியது குறித்து புகார் அளித்தன் பேரில் எனது கணவரை அழைத்து சென்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார்கள். எனது கணவர் போதையில் இசக்கிமுத்து வீட்டில் கதவை தட்டி உள்ளார்.

எனது கணவர் முருகனுக்கும் எதிரிக்கும் பிரச்சனை இருந்தது அதனால் தான் எனது மாமியாரை அடித்துவிட்டார். இரவு நேரத்தில் எதிரி வீட்டின் கதவை தட்டியது சம்பந்தமாக எதிரி அ.சா.1 டம் கேட்டார் என்றால் அதுபற்றி தெரியாது. புகார் கொடுக்கும் போது அ.சா.1 டன் நானும் பரமாயியும் காவல் நிலையத்திற்கு உடன் சென்றோம். காவல் நிலையத்தில் வைத்து தான் புகார் மனு எழுதபட்டது. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் காவல் நிலையத்திற்கு சென்ற போது எதிரியை போலீசார் அங்கு பிடித்து வைத்து இருந்தார்கள்.

அ.சா.1 எதிரிக்கு சித்தி முறை என்றால் சரிதான். எனது கணவருக்கு பெருமாள் என்ற சகலை உண்டு என்றால் சரிதான். அவர் எனக்கு சித்தப்பா மகன். அவர் ஓட்டலில் வேலை செய்து வருகிறார். அ.சா.1ம் எதிரியும் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் என்பதால் சமாதானம் பேசி பார்த்தார்கள் என்றால் சரிதான், ஆனால் உடன்பாடு ஏற்படவில்லை. சம்பவத்தை ஊரில் உள்ள பொதுமக்கள் பார்த்தார்கள். வழக்கு சம்பவத்தை குறித்து அலைபேசி மூலமாக தான் காவல் நிலையத்திற்கு தகவல் அளிக்கபட்டது என்றால் சரிதான்.

போலீசார் சம்பவத்திற்கு வந்து விசாரணை செய்து மறுநாள் காவல் நிலையத்திற்கு வந்து புகார் அளிக்குமாறு சொன்னார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல வழக்கு சம்பவத்தை கண்ணுற்று பார்க்கவில்லை என்றும், அ.சா.1 உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எனது கணவர் ஒழுங்கினமாக நடந்து கொண்டதால் அவரை கண்டிக்கும்மாறு அ.சா.1 டம் எதிரியின் மனைவி தெரிவித்தார் என்றும், அப்போது அ.சா.1 எதிரியின் மனைவியை அவதூறான வார்த்தைகளால் பேசினார் என்றும், அது சம்பந்தமாக எதிரியும் அவர் மனைவியும் எனது கணவருக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் அளித்தார்கள் என்றும், அதன் மீது நடவடிக்கை எடுக்காமல் பெருமாள் தூண்டுதலின் பேரில் எதிரிக்கு எதிராக பொய்யான சங்கதிகளுடன் புகார் அளிக்கபட்டது என்றும்

சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு சாட்சி பரமாயி நான் வந்த சிறிது நொடிகளிலேயே அவர் வந்துவிட்டார்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.119/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திருமதி. லெட்சுமி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of March 2025.

நான் மாயநேரியில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். என்னுடைய ஊர்காரர். என் மகன் முருகன் என்பவருக்கும் ஆஜர் எதிரிக்கும் இருந்த முன்விரோதத்தின் காரணமாக ஆகஸ்ட் மாதம் 2016 ம் வருடம் எனது வீட்டிற்கு குளத்து வேலை முடித்துவிட்டு வந்து கொண்டு இருந்த போது ஆஜர் எதிரி என்ன பிள்ளை வளர்த்துள்ளாய் என்று என்னை பிடித்து அடித்துவிட்டார். முடியை பிடித்து இழுத்தார். மேற்படி சம்பவம் பிள்ளையார் கோவில் அருகில் வைத்து நடந்தது. எனது உறவினர் பரமாயி, உஷா ராணி ஆகியோர் எதிரியை சத்தம் போட்டார்கள். எதிரி அங்கு இருந்து சென்றுவிட்டார். எதிரி என்னை அசிங்கமான வார்த்தைகளால் பேசினார். நான் இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேன்.

எதிரி என்னை அடித்தால் நான் மூச்சு பேச்சி இல்லாமல் கீழே விழுந்துவிட்டேன், யாரோ என் மீது தண்ணீர் தெளித்தார்கள். என்னிடம் காட்டபடும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அது **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரி வீட்டில் இரவு என் மகன் கதவை தட்டியதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி பிரச்சனை பற்றி எனக்கு தெரியாது.

எதிரியின் மனைவி என்னிடம் சத்தம் போட்டார் என்றால் இல்லை. வழக்கு சம்பவ தினத்தன்று எதிரி சேர்மன் மகன் இசக்கிமுத்து வீட்டின் கதவை தட்டியது சம்பந்தமாக அவர்கள் அளித்த புகாரின் அடிப்படையில் என் மகன் கைது செய்யபட்டார் என்றால் சரிதான். ஆனால் அது பொய் வழக்கு.

நான் புகார் அளிக்க காவல் நிலையம் சென்று இருந்த போது இசக்கிமுத்து மனைவி புகார் அளிக்க வந்து இருந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. எதிரி சம்பவ தினத்தன்று காலை எனது மகனை கண்டிக்க என்னிடம் வந்து தெரிவித்தாரா என்றால் இல்லை. மேற்படி எதிரி என்னை அடிக்கும் போது தான் என் மகன் எதிரி வீட்டுக்கு சென்ற விவரம் எனக்கு தெரிய வந்தது.

எங்கள் ஊரில் பிள்ளையார் கோவில் நடுத்தெருவில் உள்ளது. நான் குடியிருப்பது மாயநேரி தெற்கு தெருவில். எனது மகன் மாயநேரி வடக்கு தெருவில் குடியிருந்து வருகிறார். சாட்சி உஷா ராணி எனது மருமகள் என்றால் சரிதான். அவர் எனது மகனுடன் வடக்கு தெருவில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது வீட்டில் இருந்து எனது மகன் வீட்டிற்கு நடந்து சென்றால் 10 நிமிடங்கள் ஆகும்.

பிள்ளையார் கோவில் இருந்து எனது மகன் வீட்டிற்கு நடந்து சென்றால் 20 நிமிடங்கள் ஆகும். சாட்சி பரமாயி எனது உடன் பிறந்த தங்கை என்றால் சரிதான். பரமாயின் வீடு ஊரின் உள்ளே உள்ளது. பரமாயி வீட்டில் இருந்து பிள்ளையார் கோவிலுக்கு வர நடந்து சென்றால் 10 நிமிடங்கள் ஆகும். வழக்கு சம்பவத்திற்கு பிறகு போலீசார் சம்பவ இடத்திற்கு இரவு 7.00 மணிக்கு வந்தார்கள். போலீசார் வந்து எனது மகனையும் எதிரியையும் பிடித்து சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான்.

என் மகனின் சகலை பெருமாள். மேற்படி பெருமாள் காவல் நிலையத்திற்கு வந்து எதிரியை சமாதானமாக போக சொல்லி தெரிவித்தார் என்றால் இல்லை. பெருமாள் என்ன தொழில் செய்கிறார் என்று எனக்கு தெரியாது. சம்பவத்தின் போது எனக்கு மயக்கம் ஏற்பட்டு யாரோ தண்ணீர் தெளித்த பிறகு தான் முழிப்பு வந்த விவரத்தை போலீஸ் விசாரணையில் தெரிவித்தேன்.

வழக்கு சம்பவம் நடைபெற்ற விவரத்தை அறிந்து சம்பவ இடத்திற்கு சாட்சி உஷா ராணி, பரமாயி வந்தார்கள் என்றால் சம்பவம் நடக்கும் போது அவர்கள் என்னுடன் தான் இருந்தார்கள். அ.சா.ஆ.1 புகார் மனுவை எனது மற்றொரு மகன் மகராஜன் எழுதினார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வீட்டிற்கு வந்த பிறகு என்னை போலீசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் தான் பிள்ளையார் கோவில் உள்ளது. மேற்படி கோவில் நடுத்தெருவில் உள்ளது. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், என் மகன் முருகன் இரவு நேரத்தில்

ஆண்கள் இல்லாத வீட்டில் கதவை தட்டுவார் என்றால் எனது மகனிடம் எதிரி குவாட்டர் வாங்குவதற்காக பணம் கொடுத்து இருந்தார், அதை எனது மகன் வாங்கி கொடுத்தாரா இல்லையா என்று எனக்கு தெரியாது. எதிரி குவாட்டர் வாங்க பணம் கொடுத்த விவரம் எனது மகன் சொல்லி தான் தெரியும். எனது மகன் என்னிடம் நான் குவாட்டர் வாங்கி கொண்டு தான் எதிரி வீட்டிற்கு சென்றேன் என்று என மகன் என்னிடம் தெரிவித்தார் என்றால் சரிதான்.

எதிரியும் எதிரியின் மனைவியும் என் மகனுக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்று இருந்தார்கள் என்றும், மணல் தொழில் செய்து வரும் என் மகனின் சகலை பெருமாள் காவல் நிலையத்திற்கு சென்று எதிரிகளிடம் சமாதானம் பேசினார்கள் என்றும், அதற்கு உடன்படாத காரணத்தினால் பெருமாளின் தூண்டுதலின் பேரில் தான் பொய்யான புகார் கொடுக்கபட்டது என்றால் இல்லை. நான் சொல்வது போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், எதிரியின் மனைவி என் மகன் மீது புகார் அளித்துவிடுவார் என்று எண்ணி எதிரிக்கு எதிராக பொய்யான சங்கதிகளுடன் புகார் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன தேதி, சொன்ன நேரத்தில் புகார் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.